REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

# நம் நாடு

திமுக தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஐப்பசி 3உ சனி (19—10—57) ★ ★ வெளியூர்: ஐப்பசி 4உ ஞாயிறு (20—10—57) [இதழ் 109

## தீப்பற்றாத சட்டை!

சூடேற்றப்பட்ட உருக்கு, அச்சிற்குள் விழுந்து கொண்டிருக்கிறது; தீப்பொறிகள் நாலு பக்கத்திலும் சிதறுகின்றன; இவற்றில் சில, உருக்குத் தொழிலாளியின் சட்டைமீது விழுகின்றன; என்ன ஆச்சரியம்! அவரது சட்டை தீப்பற்றிக் கொள்ளவில்லையே!

இதுதான் தீப்பற்றாத சட்டை; விசேடமான பொருட்களைக் கொண்டு இது உற்பத்தி செய்யப்படுகிறது; இந்தச் சட்டையில் மிகவும் மெல்லிய உருக்குத் 'துணி' பொருத்தப்பட்டுள்

(4-ம் பக்கம் பார்க்க)

# 'மக்கள் சபையில் மதோன்மத்தர்கள்'

## 'இந்நாட்டுப் பத்திரிகைகள் அவர்களுக்கு இருப்புத் திரைகள்'

## 'நம் நாட்டு மக்களின் உள்ளக்குமுறலை டெல்லியில் கூற தமிழகப் பிரதிநிதிகள் மிரண்டு விட்டனர்'

### ஆதிக்கவெறியர்களின் உள்நோக்கம் பற்றி ஈ. வெ. கி. சம்பத் விளக்கம்

13—10—57-ல் சென்னை—திருவல்லிக்கேணி கடற்கரையில் நடந்த மாபெரும் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுகையில், தென்னகத்தின் உரிமை முழக்கத்தை இருட்டடிப்புச் செய்துவரும் இந்நாட்டுப் பத்திரிகையுலகத்தைப்பற்றியும், தமிழகத்தின் பிரதிநிதிகளாக மக்கள் சபைக்குச் சென்றுவருவோர் தமிழகத்திற்குச் செய்துவரும் துரோகத்தைக் குறித்தும் விளக்கினார்; அதன் விவரம் இங்கு தரப்படுகிறது. (பேச்சின் முற்பகுதி நேற்றைய இதழில் வெளியாகியுள்ளது:—

★

"இந்தியமொழிகளுக்கு அந்தஸ்தைத் தருகிறோம் என்றால், தாராளமாகத் தரட்டும். அந்தந்த மாநிலச் சர்க்கார்கள், அந்தந்த மாநிலத்திலிருக்கின்ற மொழிகளிலே, தங்களுடைய அரசை நடத்திச் செல்லட்டும். மாநிலங்களுக்கும்—மத்திய சர்க்காருக்கும், ஒரு மாநிலத்துக்கும்—இன்னொரு மாநிலத்துக்கும் இடையிலே செய்திப் போக்குவரத்துக்கு இந்தியைத்தான் பயன்படுத்த வேண்டும் என்று சொன்னால், அதற்குப் பின்னாலே ஒளிந்துகொண்டிருக்கின்ற அந்த உருவத்தைத்தான், தமிழ் மக்கள் இன்றைக்குக் காணவேண்டுமென்று முன்னேற்றக் கழகம் அறைகூவிக்கொண்டிருக்கிறது.

"எப்படி அந்த நாளிலே, வெள்ளைக்காரன் தன்னிடத்திலே வேலை செய்கின்றவர்கள்—பட்லராயிருந்தாலும், அவன் அரைகுறை ஆங்கிலம் தெரிந்தவனாயிருந்தாலும்—அவன் ஆங்கிலத்திலேதான் தன்னிடத்திலே பேசவேண்டுமென்று எண்ணினானோ, அதைப்போல், இன்றைக்கிருக்கின்ற இவர்கள், 'ஆட்சிப்பீடத்திற்கு வந்துவிட்டோம்—ஆட்சிபீடம் இன்றைக்கு நம்முடைய கரங்களிலே களிநடம் புரிந்துகொண்டிருக்கிறது' என்ற எண்ணம் பிறந்தவுடனே, இன்றைக்கு இவர்களுடைய மொழியை இந்த நாட்டிலிருக்கின்ற அடிமைகள் பயிலவேண்டுமென்ற கருத்திலே நம்மீது திணித்துக்கொண்டிருக்கிறார்கள். இது எல்லோருக்கும் இன்றையத்தினம் தெரிந்து தீரவேண்டும்.

"இது ஒன்றும் வெறும் ஆபீஸ் பிரச்னையல்ல; வெறும் குமஸ்தாக்களினுடைய பிரச்சினையல்ல; வெறும் சர்க்கார் அலுவலாளர்களுடைய பிரச்சினைமட்டுமல்ல; பண்டிதர்கள், படித்தவர்கள், பெரிய புலவர்கள் ஆராய்ச்சிக்கு மட்டும் உரிய பிரச்சினையல்ல; இதற்குப் பின்னாலே ஒளிந்துகொண்டிருக்கிற அரசியல் சூழ்ச்சியை நாம் உணர்ந்து தீரவேண்டும்.

"இன்றையத்தினம் மக்கள் சபை எப்படி உருவாகியிருக்கின்றது? நமக்கு மிக நன்றாகத் தெரியும்.

"இன்றையத்தினம் மக்கள் சபையிலே வீற்றிருக்கின்ற உறுப்பினர்கள் ஏறத்தாழ 507 பேர் இருக்கிறார்கள்; இந்த 507 பேரில் இடையிலே ஒரு பெரும் கனமாக உத்தரப் பிரதேசம், பீகார், மத்தியப் பிரதேசக்காரர்களும், மற்றும் அவர்களுக்கு இணக்கமாக உள்ள இராசஸ்தான்காரர்களும், குசராத்தியர்களும் உட்கார்ந்துகொண்டிருக்கிறார்கள்.

"இந்த நான்கு மாநிலத்தவர்களும் சேர்ந்து, இந்த 507 பேரிலே கிட்டத்தட்ட 240 பேர் ஆகிவிடுகிறார்கள்; ஏன் இந்த நான்கு மாநிலத்தவரை மட்டும் குறிப்பிடுகிறேன் என்றால், இவர்கள் இந்தி மொழியை ஏற்றுக்கொள்கிறவர்கள்; இந்தி மொழி நாட்டிலே வளர வேண்டுமென்பதிலே பெருமைகொள்பவர்கள்; இந்திக் கலாச்சாரத்திலே திளைத்துக்கொண்டிருப்பவர்கள்.

"ஒரே இனம் என்ற எண்ணமும், ஒரே பகுதியிலே வாழுகின்ற வாய்ப்பும் பெற்றவர்கள் அந்த மன்றத்திலே ஆட்டிப்படைத்துக்கொண்டிருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் யார்? ஒருவருக்கொருவர் துணை பெற்ற நிலையிலே, துண்டு துண்டாக, சின்னஞ்சிறு சக்திகளாகச் சிதறிக்கிடக்கின்றவர்கள்தான், பாக்கியிருக்கின்ற 267 பேரும்! இந்த நிலைமையை நாம் நன்றாக உணர வேண்டும்.

"இன்றையத்தினம் தமிழ்நாட்டிலிருந்து நாம் 41 பேர் போயிருக்கின்றோம்; உத்தரப் பிரதேசத்திலிருந்து 86 பேர் வந்திருக்கிறார்கள்; கேரளத்திலேயிருந்து—பதினெட்டோ, இருபதோ போயிருக்கிறார்கள்; பீகாரிலிருந்து ஏறத்தாழ 56 பேர் வந்திருக்கிறார்கள்.

"அதேபோல், இராசஸ்தான், மத்தியப் பிரதேசப் பகுதிகள், இவர்களுக்கு எல்லாவகையிலும் அரசியலிலே பக்கமேளம் அடிக்கின்ற குசராத்திகள்—இவர்களை எடுத்துக்கொண்டால், மொத்தத்திலே அவர்கள் 240 பேர் ஆகிறார்கள். மற்றவர்களெல்லாம் அசாம்காரர்கள், வங்காளிகள், பஞ்சாபிகள், ஒரிசாகாரர்கள் ஆந்திரர்கள், கேரளீயர்கள், கர்னாடகர்கள், தமிழர்கள் என்றால், ஒருவருக்கொருவர் தொடர்பற்ற சின்னஞ்சிறு சக்திகள். இவை அத்தனையையும் அவர்கள் நினைத்தபடி ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசியல் சூழ்ச்சியை நாம் கவனித்துத் தீரவேண்டும்.

"இன்றைக்கு அவர்களுக்குப் பெருந்துணையாக விளங்குவது என்னவென்றால், ரஷ்யாவிலே ஏதோ ஒரு இரும்புத்திரை இருந்ததாகவும், இருப்பதாகவும், இவர்கள் எழுதிக்கொண்டிருக்கிறார்களல்லவா? அது உண்மையோ பொய்யோ, நமக்குத் தெரியாது; ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில், இந்த உத்தரப் பிரதேச—பீகார் வெறியர்களுக்கு பெருந்துணைபுரிந்து கொண்டிருப்பது எதுவென்றால், இந்த நாட்டிலிருக்கின்ற பத்திரிகைகள் ஆகும்.

"ஒரு மாநிலத்திலுள்ள மக்களுடைய உள்ளத்திலே என்ன குமுறல் இருக்கிறது?—பக்கத்து மாநிலத்துக்காரருக்குக்கூட தெரியாது. அசாம் மலைக்காடுகளிலே நடைபெறுகின்ற காரியங்கள் தமிழ்நாட்டு மக்களுக்குத் தரப்படுவதில்லை. தமிழ் நாட்டில் இலட்சக்கணக்கான மக்கள் கூடி கண்ணீர் சொரிந்து, உள்ளம் கொதித்து அவ்வப்போது சொல்லுகின்ற செய்திகளை வடக்கே இருப்பவர்களுக்குத் தெரிவிப்பதில்லை. வடக்கே என்று நாம் நினைக்கத் தேவையில்லை; ஆந்திரத்திலிருக்கின்றவர்கள்கூட அறியமாட்டார்கள்-நாம் என்ன எண்ணுகிறோம்—எதைப் பற்றி எப்படி எண்ணுகிறோம் என்பது இவர்களுக்குக்கூடத் தெரியாது.

"இன்றையத்தினம் இந்தப் பத்திரிகைகளிலே வருகின்ற செய்திகளனைத்தும், சர்க்காருடைய சல்லடையிலே சலித்தெடுக்கப்பட்ட செய்திகளாயிருக்கின்றன; சர்க்காரின் கத்தரிக்கோல் பிரயோகத்திற்கு ஆளானதற்குப் பிறகு, உருக்குலைந்து அலங்கோலமாக வெளியிடப்படுகின்ற செய்திகளாயிருக்கின்றன; இந்தத் திரையை அவர்கள் சாதகமாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

"ஆனால், முன்பு குறிப்பிட்ட அந்த நான்கு மாநிலத்துக்காரர்களுக்கு மத்தியிலே அங்கே ஒரு பெரிய அரசியல் இன உணர்ச்சி உருவாகியிருக்கிறது. அந்த இன உணர்ச்சி இன ஆதிக்கவெறியாகவும் வளர்ந்திருக்கிறது; இதை நாம் உணர்ந்து தீர வேண்டும்.

"அந்த ஆதிக்கம் பரிபூரணத்துவம் அடைகின்றதா இல்லையா என்பது, இந்திப் பிரச்சினையிலே அவர்கள் பெறுகின்ற வெற்றி தோல்வியைப் பொறுத்திருக்கிறது.

"இன்றைக்கு உதாரணத்துக்கு நான் சொல்ல விரும்புகிறேன்; திராவிட முன்னேற்றக் கழகம் டில்லி மக்கள்சபையிலே எடுத்துக் கூறிற்று—'எந்தச் சக்தியைக் கொண்டும் நீங்கள் இந்தியைத் தென்னாட்டு மக்கள்மீது திணித்துவிடமுடியாது; ஒரு கை பார்க்கிறோம்'—என்று!

"பலபேர் ஆச்சரியப்பட்டார்கள்; ஏன் ஆச்சரியப்பட்டார்கள்? இப்படிப்பட்ட பலமான சக்திகொண்ட ஒரு பெருங்கூட்டம் இந்தியாவிலிருக்கிறது என்ற தகவலே, இதுநாள்வரை அந்த அனுபவம் மிகுந்த அரசியல் தலைவர்களுக்குத் தெரியாது; காரணமென்ன? இந்தப் பத்திரிகைகளின் மூலமாகத்தான் அவர்கள் தமிழர்களின் உள்ளங்களைத் தடவுகிறார்கள்; தென்னாட்டு மக்களைப் பற்றி அவர்கள் தெரிந்துகொள்கிறார்கள்.

"தோழர் கோவிந்தசாமி அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள்—'1937-லே இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினோம்; 1947-லே நடத்தினோம்; 1957-லே நடத்துகின்ற தருவாயிலே வந்து நிற்கின்றோம்'—என்று, 20 வருடத்திய இந்தி எதிர்ப்பு வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னார்கள்.

"ஆனால், 20 ஆண்டுகளுக்குப் பின்பு நிலைமை என்ன? 'இந்தியே வேண்டாமென்று சொல்லுகிறீர்கள்?' என்று, அந்நாட்டவர்கள் இப்போதுதான் கேட்கிறார்கள்; நான் மக்கள்சபையிலே பேசி முடித்துவிட்டபிறகு, என்னைத் தனியே சந்திக்கும்போதும் கேட்கிறார்கள்—'எங்களுக்குப் புரியவில்லையே; இந்தியே வேண்டாமென்கிறீர்களா? வேண்டவே வேண்டாமென்கிறீர்களா? இடையிலே ஒரு இடம்கூடக் கிடையாதா?'—என்று அவர்கள் கேட்கிறார்கள்; அவ்வளவு அதிசயப்படுகிறார்கள்.

"தாளமுத்து-நடாரசன் செத்துப் போயிருக்கிறார்கள்; தாய்மார்கள் எத்தனையோபேர் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள்; இன்றைக்கு நாம் தெருவெல்லாம் முழங்கிக்கொண்டிருக்கிறோம்; 20 ஆண்டுகளுக்குப் பிறகு கேட்கிறார்கள்—'இந்தியே வேண்டாமென்றா தமிழ் நாட்டில் சொல்லுகிறார்கள்?'—என்று!

"அதனாலேதான் நான் குறிப்பிடுகிறேன்—ஒரு மாநிலத்திலேயிருக்கின்ற மக்களுடைய உள்ளத்திலே எழுகின்ற எண்ணங்களை—அவர்களுடைய உள்ளக் குமுறல்களை, இன்னொரு மாநிலத்திலே இருக்கின்ற மக்கள், அறவே அறிய ஒட்டாத வாறு இந்தச் சர்க்கார், பத்திரிகைத் திரையை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது.

"டெல்லியிலிருக்கின்ற பிரச்சினையெல்லாம் - இந்தியைப்பற்றி முதலிலே இருந்த பிரச்சினை—எந்த இந்தி? காந்தியாரவர்கள் சொல்லிப்போனார்களே, 'கடைவீதி இந்துஸ்தானி' என்று, அதை வைத்துக்கொள்வதா? அல்லது தாண்டனைப்போன்ற உத்தரப் பிரதேச மொழி வெறியர்கள் கூறுகிறார்களே, 'சமஸ்கிருதம் கலந்த தேவநாகிரி இந்தி' என்று, அதை வைத்துக்கொள்வதா?—என்ற விவாதம் மட்டும் தான் இந்தியா பூராவும் நடைபெறுவதாக எண்ணிக்கொண்டிருந்தார்கள்; அந்த விவாதத்துக்கு ஒருமுற்றுப்புள்ளி வைக்கப்பட்டது; காந்தியாருடைய கல்லறையோடு அவருடைய எண்ணத்தையும் புதைத்துவிட்டு, இவர்கள் இப்பொழுது புது எண்ணங்களைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கிறார்கள்; 'தேவநாகிரி இந்தி'

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★

## நன்றி அறிவிப்பு

சென்னைத் திருவல்லிக்கேணி மாட்டுவாங்குப்பம் (41-வது வட்டம்) குடிசை யிழந்தோர் உதவி நிதியாக, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ஈகைப் பண்புடனும், இரக்கத் தன்மையுடனும், 8—4—1957 அன்று ரூபாய் ஆயிரம் தலைமைக் கழகத்திடம் ஒப்படைத்தார்கள். தலைமைக் கழகம் அந்த நிதியை முறைப்படி செலவழிப்பதற்காகத் தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்கள் தலைமையில், தோழர்கள் அ. பெ. அரசு எம்.சி., வி. சி. ஜான், சி. வி. கோவிந்தராசு, எம். கே. இராசமாணிக்கம் ஆகியோரைக் கொண்ட துயர் உதவிக்குழு ஒன்று அமைத்தது.

அந்தக் குழுவினர், உரியவர்களுக்கான வசதிகளைஒழுங்குபட நிறைவேற்றி, அதற்கான வரவு-செலவுக் கணக்குகளைத் தலைமைக் கழகத்திடம் ஒப்படைத்துள்ளனர். தலைமைக் கழகம் அதனைப் பரிசீலனை செய்து ஏற்றுக்கொண்டது.

பெருந்தன்மையோடு, குடிசையிழந்தோருக்கு உதவிநிதி தந்து உதவ முன்வந்த புரட்சிநடிகர் எம். ஜி. ஆர். அவர்களுக்கும், அந்த நிதியை முறைப்படி செலவழிப்பதற்கு அரும் முயற்சிகளை எடுத்துக்கொண்ட துயர் உதவிக் குழுவினருக்கும் தலைமைக் கழகத்தின் சார்பில் மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அன்பன்,
இரா. நெடுஞ்செழியன்,
பொதுச் செயலாளர்
தி. மு. க.

18—10—'57
'அறிவகம்'
சென்னை-13

★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 19—10—'57 சனி

# பகைமூட்டும் பணி

உணவுத் துறையில் தமிழகம் பற்றாக்குறையாக இருந்துவருகிறது. இதைவிட மிதமிஞ்சிய பற்றாக்குறையில் கேரளம் இருந்துவருகிறது.

தாங்களே உணவுப் பற்றாக்குறையினால் திண்டாடுகின்ற பொழுது, தங்கள் பகுதியில் உற்பத்தியாகும் குறைந்தபட்ச உணவுப் பொருளையும் கேரள வியாபாரிகள் கொள்முதல் செய்து தங்கள் பகுதிக்குக் கொண்டு செல்வதைக் காணும் பொழுது, தமிழ் மக்களுக்கு எரிச்சல் ஏற்படுகிறது. கேரளத்தார், தமிழகத்தில் அரிசி கொள்முதல் செய்து தங்கள் பகுதிக்குக் கொண்டு செல்வதைத் தடுத்தாக வேண்டும் என்ற பரிகாரத்தையும் தமிழ் மக்கள் கூற முன்வருகின்றனர்.

தங்களுடைய இக்கோரிக்கைக்கு, அராபியக் கடலில் விழுந்து வீணாகிவிடும் கேரளத்துத் தண்ணீரை தமிழகத்திற்கு வழங்குவதில் கேரள முதலமைச்சர் குறிப்பிடும் நியாயத்தை தமிழ் மக்கள் காட்டவும் கூடும். அப்படிக் காட்டுவதில் நியாய விரோதம் எதுவும் இல்லை.

உணவுப் பற்றாக்குறையாக இருந்துவரும் தமிழகத்திலிருந்து கேரள வியாபாரிகள் அதிக விலை கொடுத்து அரிசி வாங்குவதை, தமிழக மக்கள் தடுக்கவேண்டும் எனக் கோருவதும், அதை அடிப்படையாக வைத்து சென்னை அரசாங்கம் செயல்பட விரும்புவதும் நியாயமாகுமா என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். தான் விரும்பிய வண்ணம், தமிழகத்திலிருந்து ஒரு மணி அரிசியும் கேரளத்திற்குச் செல்லாமல் தடுத்து நிறுத்த சென்னை அரசாங்கத்திற்குச் சட்டப்படி அதிகாரமுண்டா என்பதைப் பார்ப்போம்.

அதுபோன்றே, தமிழகத்தின் உணவுப்பற்றாக்குறையைக் கருதி, தமிழகத்திலிருந்து அரிசி கொள்முதல் செய்து கேரளத்திற்குள் கொண்டுவரக் கூடாது எனத் தடுத்து நிறுத்த கேரள ஆட்சிக்கு சட்டப்படி அதிகாரம் உண்டா என்பதையும் ஆராய்வோம்.

தனது பற்றாக்குறையின் காரணமாக தமிழகத்திலிருந்து கேரளத்திற்கு அரிசி செல்வதைத் தடுக்க, சென்னை அரசாங்கம் விரும்பினாலும் விரும்பாமற் போனாலும், சென்னை அரசாங்கத்திற்குக் கடுகளவு அதிகாரமும் கிடையாது. அதுபோன்றே, தமிழகத்திலிருந்து அரிசியைக் கேரளத்திற்குள் கொண்டுவரக் கூடாது எனத் தடுத்து நிறுத்த கேரள ஆட்சிக்கும் அதிகாரம் கிடையாது.

தம் விருப்பம்போல் செயல்பட கேரள ஆட்சியாலும் முடியாது—சென்னை அரசாங்கத்தாலும் இயலாது. இரண்டும் தாம் விரும்பிய வண்ணம் செயல்படக்கூடிய சுதந்தர அரசுகள் அல்ல.

கேரளமும், சென்னையும் மிக மிகக் குறைந்த அதிகாரங்களைக் கொண்ட சிற்றரசுகளுக்குச் சமானமுள்ளவையாகும். சிற்றரசுகளிலும் குறைந்தவை இவை இரண்டும் எனக் கூறுவதுகூட பொருந்தக்கூடியதே.

குறைந்த அளவு அதிகாரங்களைக் கொண்டிருப்பதில் கேரளத்திற்கும் சென்னைக்கும் அணுவளவு உயர்வு தாழ்வும் கிடையாது. இரண்டும் ஒத்த வகையில் அமைந்திருப்பதேயாகும்.

கேரளமும், சென்னையும் பெயரளவுக்குத்தான் ஆட்சி அமைப்புகள். இவை இரண்டும் டெல்லிப் பேரரசின் ஏவல்படி ஆடவேண்டியவைகள்.

எனவே, தம்தம் மக்கள் உணவுத் தேவையை ஈடுசெய்தாக வேண்டும் என இந்தியப் பேரரசிடம் பன்னிப் பன்னிக் கூறும் ஒன்றைத் தவிர, கேரள—சென்னை ஆட்சிகளால் வேறு எதையும் செய்ய முடியாது. அவ்வாறு இரு ஆட்சிகளும் இடையறாது வற்புறுத்தியதின் விளைவுதான் தென்னக உணவு மண்டல ஏற்பாடு.

கேரள—சென்னை ஆட்சிகள் வற்புறுத்தும் எந்த கோரிக்கையையும் எழுத்துக்கெழுத்து அப்படியே செயல்படுத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் இந்தியப் பேரரசிற்கு இல்லை. இவ்விரண்டும் வற்புறுத்தும் கோரிக்கைகளை முழு அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ தம் கருத்துப்படி நிறைவேற்றிவைக்கும் உரிமை இந்தியப் பேரரசிற்கு உண்டு. இவை வெளியிடும் கோரிக்கைகள் அனைத்தையும் ஒரேயடியாக அலட்சியப்படுத்திவிட்டு, அதற்கு மாற்றாக வேறு ஒரு புதிய ஏற்பாட்டைச் செயல்படுத்தவும் இந்தியப் பேரரசிற்கு அதிகாரம் உண்டு. அக்கட்டத்தில் தாங்கள், அந்தக் கோரிக்கைகளை ஏன் செயல்படுத்தக்கூடாது எனக் கேட்கும் உரிமைகேரளத்திற்கோ—சென்னைக்கோ அறவே இருக்கவில்லை.

இதற்கு எடுத்துக்காட்டாக தென்னக உணவு மண்டல ஏற்பாட்டைக் குறிப்பிடலாம். மேற்படி உணவு மண்டல ஏற்பாடு இந்தியப் பேரரசின் சொந்த ஆக்கமாகும்.

தென்னக உணவு மண்டல ஏற்பாட்டில் மிதமிஞ்சிய உணவுப் பற்றாக்குறையாக இருந்துவரும் கேரளத்தைச் சேர்க்கக் கூடாது என்றும், அதன் அரிசித் தேவையை இந்தியப் பேரரசே நேரடியாக ஈடுசெய்து கொள்ள முன்வரட்டும் என்றும் சென்னை ஆட்சியின் சார்பில் கோரப்பட்டது. ஆனால் அக்கோரிக்கையை, தென்னக உணவு மண்டலத்தை உருவாக்கிய இந்தியப் பேரரசு கருதிப் பார்க்கவும் மறுத்துவிட்டு, தன் முடிவுப்படி நடந்து கொண்டது.

தென்னகத்தோடு எல்லாத் துறைகளிலும் ஒத்திருக்கும் மைசூரை தென்மண்டலக் குழுவுடன் இணைக்க விரும்பாது, பிடிவாதமாக நடந்துகொண்டுள்ள இந்தியப் பேரரசு, தென்னக உணவு மண்டலத்துடன் மட்டும்—சென்னை அரசாங்கம் தடுக்கக்கோரியும்—கேரளத்தை இணைத்துவிட்டிருக்கிறது என்றால், அச்செயலில் ஏதோ மறைந்திருக்கிறது என்றுதானே கருத வேண்டும்? அதாவது, எதையோ எதிர்பார்த்துத்தானே இந்தியப் பேரரசு இப்படிச் செயல்பட்டு இருக்கிறது என்று எண்ணவேண்டும்?

தாங்களே உணவுக்குத் திண்டாடும்பொழுது, தங்களுக்குக் கிடைக்கக்கூடிய உணவுப் பண்டத்தைக் கேரளத்தார் கடத்திச் செல்லுகிறார்களே என்று தமிழ் மக்கள் எரிச்சலடைவதையும், அதைத் தடுத்து நிறுத்த உடனடியாக முயல வேண்டும் என சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துவதையும், அதை வைத்துக்கொண்டு சென்னை அரசாங்கம் இந்தியப் பேரரசிடம் கோருவதையும், அவை எவ்வளவுதான்நியாயமானது எனத் தங்களால் உணரப்பட்டாலும்—கேரள மக்கள் அகமும்-முகமும் மலர ஏற்றுக்கொள்ளவா செய்வர்? ஒருக்காலும் இல்லை.

உள்ளுக்குள் மூண்டு எரியும் பகை உணர்வுடன்தான், தமிழ் மக்கள் கோரிக்கையை கேரள மக்களும் நோக்குவர். அதுபோலவே தான் தங்களைப் பட்டினிப் போட்டுவிட்டுத் தங்களுடைய அரிசியை கேரள வியாபாரிகள் கடத்திச் செல்வதையும் தமிழ் மக்கள், வெந்தப்புண்ணில் வேல் பாய்ந்த வேழம்போல் வேதனையுடன் நோக்குவர்.

பகை மூளும்—நட்பு குலையும்.

ஒன்றுக்கொன்று, உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைந்து வாழ வேண்டிய திராவிட மக்களான கேரள மக்களும், தமிழ் மக்களும் இந்தியப் பேரரசு திட்டமிட்டு உருவாக்கிய தென்னக உணவு மண்டலத்தின் விளைவாக பகைபட்டு வாழவேண்டிய அவலநிலை ஏற்பட்டு இருக்கின்றது. இந்தியப் பேரரசின் பகைமூட்டும் பணி வெல்கிறது!

# 'தென்னாடு என ஒன்று இருப்பதை டெல்லியின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்'

## 'தொழிற்சாலைகள் அனைத்தும் வடக்கே!'

### இரப்பர், இரயில் பெட்டித் தொழிற்சாலைகள் தென்னாட்டில் நிறுவப்படாதது ஏன்?

சென்னை, அக். 17—

"பெரும்பாலான தொழிற்சாலைகளும், உற்பத்திச் சாலைகளும் வடநாட்டிலேயே நிறுவப்பட்டிருக்கின்றன; போதாது என்று, மேலும் மேலும் அங்கேயே தொழிற்சாலைகள் நிறுவப்படுகின்றன.

"கேரளத்தில் ஒரு இரப்பர் தொழிற்சாலை அமைப்பதாகத் திட்டம் இருந்தது; ஆனால், அந்தத் திட்டம் குப்பைக் கூடைக்குப் போய்விட்டது; இரப்பர் தொழிற்சாலை கல்கத்தாவில் அமைக்கப்படவிருக்கிறதாம்.

"'மீட்டர் கேஜ் கோச் பாக்டரி' ஷோரனூர், கோவை, அல்லது மதுரையில் அமையவேண்டுமென தென்னாட்டு மக்கள் நெடு நாட்களாக ஆவல் தெரிவித்திருக்கின்றனர்; ஆனால், மத்திய இரயில்வே அமைச்சர் சேகசீவன்ராம், அந்தத் தொழிற்சாலையை உத்தரப்பிரதேசத்தில் அமைக்க தாங்கள் உத்தேசித்திருப்பதாக வெளியிட்டுள்ள தகவல் தங்கள் 9—10—57-ந் தேதிய இதழில் வெளிவந்துள்ளது.

"இதுபற்றி டெல்லி சர்க்கார் மீண்டும் சிந்திக்குமாறு செய்யவேண்டும்; அத்துடன், தென்னாடு என்று ஒன்று இருப்பதையும் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும்."

இவ்வாறு, கல்பாத்தியைச் சேர்ந்த சி. எம். இராமச்சந்திரன் என்பார், 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'—சென்னை 17—10—57-ந் தேதிய இதழில் கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்.

## கிழக்குஜெர்மனிஆட்சிக்கு யூகோ அங்கீகாரம்

பெல்கிரேட், அக். 15—

கிழக்கு ஜெர்மனியுடன் 'ராஜீய'த் தொடர்புகொள்வது என்று யூகோ சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

இரு நாடுகளும் தூதுவர்களைப் பரிமாறிக்கொள்ளும்.

இப்படி கிழக்கு ஜெர்மனி ஆட்சிக்கு அங்கீகாரம் தந்து, தூதுவர்களை அனுப்புவது என்ற யூகோவின் முடிவை மேற்கு ஜெர்மனி வன்மையாக எதிர்த்ததாம்!

மேலும், இந்த முடிவு கண்டு அமெரிக்கா வருந்துவதாகத் தெரிவித்திருக்கிறதாம்!

## ஆண்டவன் பெயரால் மோசடி!

### அறநிலைய அறிக்கை தரும் தகவல்

சென்னை, அக். 16—

சென்னை மாநில வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள வேலூர் தாலுகாவில், விரிஞ்சிபுரம் என்ற பகுதியில் மார்க்கபந்து என்ற ஆண்டவனின் கோவில் உள்ளது.

டாக்டர் சர் சி. பி. இராமசாமி அய்யர் அவர்களின் வாழ்க்கைத் துணைவி திருவாட்டி சீதம்மாள் அவர்கள் 1929-ம் ஆண்டில் விலை உயர்ந்த தங்க 'ஒட்டியாணம்' ஒன்றைக் காணிக்கையாக அக்கோவிலுக்குத் தந்தார்களாம்; இப்போது அதற்கு மாறாக ஒரு போலி ஒட்டியாணம் உள்ளதாம்!

அசல்'ஒட்டியாணம்'60 சவரன் கள் தங்கம் கொண்டது-ரூ. 1,250 மதிப்புள்ளது—என்று கோவிலின் சொத்து பற்றிய மதிப்பீட்டில் குறிக்கப்பட்டுள்ளதாம்.

இப்போதுள்ள தங்க முலாம் பூசப்பட்ட வெள்ளி ஒட்டியாணம் ரூ. 28—11—0 மட்டுமே மதிப்புள்ளதாம்.

இந்த மாற்றல்—கையாடல் போலீசுக்கு அறிவிக்கப்பட்டதாம்; போலீஸ் தீவிரமாக விசாரித்ததாம்; ஆனால் உண்மையைக் கண்டுபிடிக்கவில்லையாம்; இந்த வழக்கின் உண்மை, கண்டுபிடிக்க முடியாதது' என்று போலீஸ் குறிப்பெழுதி முடித்துவிட்டதாம்!

இந்தத் தகவல்கள் அறநிலையப் பாதுகாப்பு நிறுவன அறிக்கையில் காணப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு மேலும் இந்திய மிளகாய்

புதுடில்லி, அக். 17—

இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும்பொருட்டு மேலும் மிளகாய் 'கோட்டா'க்களை விடுவிக்க இந்தியப் பேரரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

## சண்டையை நிறுத்த

### மலேயா கம்யூனிஸ்டுகள் நிபந்தனை

### பிரதமருக்குக் கடிதம்

சிங்கப்பூர், அக். 15—

சிறையில் அடைக்கப்பட்டுள்ள, கம்யூனிஸ்டுகளையும், சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களையும் நிபந்தனையின்றி விடுதலை செய்வதானால், தாங்கள் நடத்திவரும் சண்டைகளைக் கைவிட்டுவிடத் தயாராக இருப்பதாக, மலேயா கம்யூனிஸ்டுகள், பிரதமர் துங்கு அப்துல் ரகிமானுக்குக் கடிதம் எழுதியிருப்பதாகத் தெரியவருகிறது.

## சேரி சீர்திருத்தம்

### சென்னை சர்க்கார் கடன்

சென்னை, அக். 17—

வரமைப்பூச் சேரி என்ற பகுதியைச் சீர்திருத்துவதற்காக ரூ. 57,000-மும், மீனம்பாள் சிவராஜ் நகர் சேரியைச் சீர்திருத்துவதற்காக ரூ. 1,12,500-ம் சென்னை அரசாங்கத்தால் கடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்தொகைகள் 30 ஆண்டுத் தவணையில் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது.

## திட்டத்தை எள்ளி நகையாடுகிறார் லோகியா

### ஒருசில பகுதிகளுக்கு மட்டும் அக்கறை காட்டுவதேன்?

அலகாபாத், அக். 16—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஒரேயடியாக மாற்றித் திருத்தி அமைக்க வேண்டும்"

என்று சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் லோகியா வற்புறுத்தியுள்ளார்.

"பத்து இலட்சம் பேரைக் கொண்ட ஒரு உணவுப் படை, 5 இலட்சம் பேரைக்கொண்ட ஒரு கல்விப் படை, வடிகட்டிய நல்ல தண்ணீர் வழங்கஒரு உயரியதிட்டம் இவை மிக அவசரமும் அவசியமும் நிரம்பியதாகும்"

என்று அவர் திட்டத்திலுள்ள குறையை வெளிப்படுத்துகையில் குறிப்பிட்டுள்ளார்.

தன்னுடைய யோசனைகள் சுமார் 30 இலட்சம் பேருக்கு வேலையளிக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் போக்கு சரியில்லை என்றும் திட்டத்தில் மாற்றம் வேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

'ஐந்தாண்டுத் திட்டம், நாட்டின் ஒருசில பகுதிகளை மட்டும் நவீனமாக்கும் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது' என்று விளக்கி மத்திய அரசின் ஓரவஞ்சனையைச் சுட்டிக்காட்டியுள்ளார் அவர்.

## டெல்லியின் வஞ்சகம் வெளிப்படுகிறது?

சென்னை, அக். 16—

இந்த ஆண்டு குறுவை விளைச்சலினால், அரிசி விலை ஒரே நிலையில் நீடிக்கும் என்று அதிகாரிகள் கருதி வந்தனராம்; ஆனால், அவர்கள் போட்டது தப்புக்கணக்காகிவிட்டது.

இதற்குள்ளாகவே பழைய விலை ரூ. 19-க்கு வந்துவிட்டதாம்; கேரளம் அரிசி வாங்குவதே இதற்குக் காரணம் என்று கற்பிக்கப்படுகிறது.

மத்தியப் பேரரசின் தென்மண்டல உணவுப் பொருள் நடமாட்டத் திட்டம் வெறும் கானல் நீராகிவிட்டது.

சென்னை மாநில உணவு இலாகா அதிகாரிகள் என்ன செய்வதெனப் புரியாமல் திண்டாடும் நிலைக்கு அரிசி விலையேற்றம் உள்ளது.

# கோபியில் அண்ணா, சம்பத்

## கொட்டிய மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் கூட்டம்

கோபிசெட்டிப்பாளையம், அக். 16—

15—10—57 மாலை 7 மணிக்கு கோபி பெரியார் மைதானத்தில் தோழர் ஜி. கே. பழனிச்சாமி தலைமையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முதலில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம். பி. அவர்கள் பேசத் தொடங்கியதும் மழை பெய்ய ஆரம்பித்துவிட்டதால், சம்பத் அவர்கள் தம்முடைய உரையை முடித்துக்கொண்டு அண்ணா அவர்களைப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

அண்ணா அவர்கள் வழங்கிய கருத்துரைகளைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் வானம் வழங்கிய மழைத் துளிகளைப் பொருட்படுத்தவே இல்லை.

குடைகளை விரித்துப் பிடித்துக்கொண்டும், தலைக்கு முக்காடு போட்டுக்கொண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து அண்ணா அவர்களின் அறிவுரையைக் கேட்டனர்.

சுமார் 35 நிமிடங்கள் வரை அண்ணா அவர்கள் பேசிய பிறகு மீண்டும் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

தோழர் சம்பத் அவர்கள் பேச எழுந்தபோது மழையும் ஓய்ந்துவிட்டது; மிக்க அமைதியான சூழ்நிலையில் தோழர் சம்பத் அவர்கள் உணர்ச்சிமிக்க உரையாற்றினார்.

கூட்டத் துவக்கத்தில் அண்ணா அவர்களுக்கும், சம்பத் அவர்களுக்கும் பல்வேறு அமைப்புகளாலும், தனிப்பட்டவர்களாலும் ஏராளமான மலர்மாலைகளும், அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

மளிகைத் தொழிலாளர் சார்பில் 1001 காலணாக்கள் கொண்ட பணமுடிப்பு பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் நிதிக்கு அண்ணாவிடம் அளிக்கப்பட்டது.

## கழகக் கூட்டத்தில் காலிகள் விஷமத்தனம்

அறந்தாங்கியிலிருந்து 10 கல் தொலைவிலுள்ள கொத்தமங்கலம் கிராமத்தில் 6—10—57 மாலை பட்டுக்கோட்டை வட்டச் செயலாளர் தோழர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தி. மு. கழகக் கூட்டம் ஒன்று நடந்தது. கூட்டத்தில் தோழர்கள் ஆ. துரையரசன், இராம. அசோகன், கதிரேசன், கலாநேசன் முதலியோர் கழகக் கொள்கையை விளக்கிப் பேசினர்.

கூட்டத்திற்கு ஏராளமான கிராம மக்களும் தாய்மார்களும் வந்திருந்தனர். இதைக் காணப் பொறாத அப்பகுதிகளில் உள்ள கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனப்படுவோர், கூட்ட ஆரம்பத்திலிருந்து சலசலப்பும் சந்தடியும் உண்டுபண்ணிக் கொண்டிருந்தனர். தோழர்களும் பொதுமக்களும் எவ்வளவோ அரசியல் கண்ணியத்தை எடுத்துச்சொல்லியும் கேளாது, மேடையை நோக்கி மக்களைத் தள்ளி, நெருக்கடியை உண்டுபண்ணினர்; தோழர்களும் பொதுமக்களும் ஒன்றுசேர்ந்து மேடையைக் காத்தனர். தாய்மார்களை மட்டும் பத்திரமாக அப்புறப்படுத்தி வீடுகளில் கொண்டு போய்ச் சேர்த்தனர் தோழர்கள்.

கலகக்காரர்களைச் சமாளித்த வண்ணம் கூட்டத்தை நடத்துமாறு ஊர்ப்பெரியவர்கள் கேட்டுக்கொண்டனர்.

கூட்டம் சுமார் 3 மணி நேரம் நடைபெற்று வெற்றிகரமாய் முடிவுறும் தறுவாயில் திடீரென அக்குண்டர்கள் கூட்டத்துள் ஊடுருவிச்சென்று, சில கழகத் தோழர்களைத் தூக்கிச் சென்று அடித்துத் துன்புறுத்தினர் என்றும் மக்கள், தோழர்களைக் காலிகளிடமிருந்து விடுவித்து வீட்டில் கொண்டுசேர்த்தனர் என்றும் கம்யூனிஸ்டுகளின் இந்த விபரீதப் போக்கைக் கண்டு அப்பகுதி கிராமத்தவர்கள் பெரும் பீதியுற்றிருக்கிறார்கள் என்றும் தெரியவருகிறது.

## சம்பத் படிப்பகத் திறப்பு விழா

13—10—57 காலை 10 மணிக்கு குடந்தை நகர 29-வது வட்ட தி. மு. க. கிளையின் சார்பில் சம்பத் படிப்பகத் திறப்பு விழா நடைபெற்றது; தோழர்கள் ப. க. பெருமாள் முன்மொழிய வை. கோவிந்தன்வழிமொழிய தோழர் கே. கே. நீலமேகம் தலைமை வகித்தார்.

தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் படிப்பகத்தைத் திறந்து வைத்து இந்தியை எதிர்த்து முதன் முதலாகப் பாராளுமன்றத்தில் சொற்போர் புரிந்த இளவல் சம்பத் பெயரால் இன்று இப்படிப்பகம் திறக்கப்படுவது மிக்க மகிழ்ச்சியெனவும், தொழிலாளர்கள் ஈடுபட்டு நடத்தும் இப்படிப்பகம் சிறப்புற நடக்கவேண்டுமெனவும் பேசினார்.

இறுதியாக தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் படிப்பகத்தை வாழ்த்த, தோழர் கே. கே. நீலமேகம் முடிவுரையுடன், தோழர் கோ. இராகவன் நன்றி கூற கூட்டம் முடிவுற்றது.

### 'உரிமைக் குரல்'--நாடகம்

குடந்தை இராசகோபால் தியேட்டரில், 13—10—57 இரவு 10 மணிக்கு தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரம் அவர்கள் தலைமையில், சத்திரக்கருப்பூர் கலைவாணர் நாடக மன்றத்தாரின் 'உரிமைக்குரல்' நாடகம் சிறப்புற நடைபெற்றது. தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள் நாடகத்தைப் பாராட்டிப் பேசினார்.

# 'ஊதியக் குழு முடிவுகளை அமுலாக்க அரசாங்கத்துக்கு அதிகாரம் வேண்டும்'

## மாநில தொழிலாளர் மந்திரிகள் மாநாட்டு முடிவு

புதுடில்லி, அக். 17—

தொழில் துறைக்கான ஊதியக் குழுக்களின் முடிவுகளை அமுலுக்குக் கொண்டுவர சட்டபூர்வமான அதிகாரம் வழங்கும்வகையில் சட்டம் இயற்றப்படவேண்டும் என்றும், இம்முடிவுகளை நடைமுறைக்குக் கொண்டுவர மாநில அரசுகளுக்கு அதிகாரம் இருக்கவேண்டுமென்றும் மாநில தொழிலாளர் அமைச்சர்களின் மாநாடு சிபார்சு செய்துள்ளது.

சவுளித் தொழிலுக்கு இதுவரை அரசாங்கம் ஊதியக் குழு அமைத்திருக்கிறது; சிமெண்டு தொழிலுக்கும், சர்க்கரைத் தொழிலுக்கும் ஊதியக் குழுக்கள் இப்பொழுது அமைக்கப்படுகின்றன.

தற்பொழுதைய ஊதியக் குழுக்களின் முடிவுகள் வெறும் சிபாரிசு உருவிலேயே இருக்கின்றன; கட்டாயமாக அவற்றை அமுல் நடத்தவேண்டுமென்று யாரையும் கட்டுப்படுத்தவில்லை. இம்முடிவுகளுக்கு சட்டத்துறை அதிகாரம் வழங்க இப்போது சிபாரிசு செய்யப்பட்டுள்ளது.

தென் பகுதியிலும், வட பகுதியிலுமுள்ள மலைத் தோட்டங்களுக்குத் தனித்தனியாக ஊதியக் குழு நிறுவுவது என்றும், மலைத் தோட்டங்களுக்கும் தொழில் வளர்ச்சி, ஒழுங்குமுறைச் சட்டத்தை விரிவுபடுத்துவது என்றும் இம்மாநாடு முடிவு செய்துள்ளது.

ஒரு தொழிலுக்குப் பொதுவாக ஒரு ஊதியக் குழுதான் நியமிக்கப்படுகிறது என்றாலும், தென் பகுதிக்கும்—வட பகுதிக்கும் உள்ள நிலைமைகள் வேறுபடுவதால் இரு வேறு ஊதியக் குழுக்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று கருதப்படுகிறது.

தனித் தனியாக இரண்டு ஊதியக் குழுக்கள் நிறுவப்பட்டாலும், இரண்டும் சேர்ந்து வேலை செய்து, ஒரே மாதிரியாகக் கவனிக்கவேண்டிய பிரச்சினைகளைப் பொதுவானமுறையில் அணுக வழிகண்டாக வேண்டுமென்று மத்திய அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா கூறினார்.

தொழிலாளருக்கு வீட்டு வசதி மானியத் திட்டம் குறித்து மாநாடு நீண்ட நேரம் விவாதித்தது. இத்திட்டங்களுக்கு அனுமதியளிப்பதில் மத்திய அரசாங்கம் அனாவசிய காலதாமதம் செய்வதாகப் பல மாநில அரசுகள் சார்பில் புகார் கூறப்பட்டது. முதலாளிகளினால் வீடு கட்டித்தர முடியவில்லையானால் மாநில அரசாங்கத்துக்கு அவர்கள் பணம் தரவேண்டுமென்றும், மாநில சர்க்கார் வீடுகள் கட்டுவதை மேற்கொள்ளுமென்றும், தொழிலாளர்கள் சொந்தமாக வீடு கட்டிக்கொள்ள ஊக்கமளிக்கும்வகையில் நிறைய தொழிலாளர் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் அமைக்கப்படவேண்டுமென்றும் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

# அக். 13: இந்தி எதிர்ப்பு நாள்

## நாடெங்கும் கண்டன முழக்கம்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் விடுத்த அறிக்கைக்கிணங்க, 13-10-57-ல், நாடெங்கும் 'இந்தி எதிர்ப்பு நாள்' சிறப்புற நடைபெற்ற விவரம் இங்கு சுருக்கமாகத் தரப்படுகிறது:—

### குடந்தை:

மாலை 5 மணிக்கு புகைவண்டி நிலயத்திலிருந்து ஓர் மாபெரும் கண்டன ஊர்வலம் புறப்பட்டது; அதில் முதலில் நகர தி. மு. கழகக் கொடி எடுத்துச் செல்லப்பட்டது; பின், 2, 3-வது வட்டங்களின் சார்பில் மேலக் காவேரி அறிவொளி மன்றம்; 16-வது வட்டம்; 23-வது வட்டத்தின் சார்பில் பன்னீர்செல்வம் படிப்பகத்தார், திரு. வி. க. மன்றம், அழகிரி மன்றம், உதயசூரியன் படிப்பகம், நாவலர் படிப்பகம், சௌந்திர பாண்டியன் படிப்பகம், சம்பத் படிப்பகம், கலைவாணர் படிப்பகம், எம். ஜி. ஆர். மன்றம், வான்மதி கலை மன்றம், கே. வி. கே. சாமி மன்றம், அண்ணா படிப்பகம்; 20, 27-வது வட்ட தி. மு. க. கிளை, துவரங்குறிச்சி இளைஞர் தமிழ் மன்றம், பாணாதுறை இளங்கோ படிப்பகம், சத்திரக்கருப்பூர் தி. மு. க. கிளை, கொற்கை தி. மு. க. கிளை, தாராசுரம் தி. மு. க. மாணவர் கிளை, சுருட்டுத் தொழிலாளர்கள், தி. மு. க. கிளையின் சார்பில் ஊர்வலம் முக்கிய வீதிகள் வழியாகச் சென்றது. 2,000-க்கு மேற்பட்ட தோழர்கள் கலந்துகொண்டனர்.

மாலையில் நகரச் செயலாளர் சு. பத்மநாபன் முன்மொழிய தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். சிங்கப்பூர் தி. மு. க. உறுப்பினர் அப்துல் கபூர், பொன் தருமன் ஆகியோர் இந்தி எதிர்ப்பு பற்றி விரிவாகப் பேசினர்.

பின் தோழர் காஞ்சி-கலியாணசுந்தரம் அவர்கள், தமிழின் செறிவையும், இந்தியின் வளமற்ற தன்மையைப் பற்றியும் பேசினார்.

பின் தோழர் கே. ஏ. மதியழகன் அவர்கள், கேர் குழுவினர் அறிக்கையையும், குடந்தையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் பற்றியும் பேசினார்.

#### மாணவர் கூட்டம்

காலை 10 மணிக்கு குடந்தை கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இந்தியை எதிர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### மாயூரம்:

மாயூரம் நகர தி. மு. கழகச் சார்பில் மாலை 3 மணிக்கு முசாபரி பங்களாவிலிருந்து தோழர் கே. எஸ். சௌந்தரராசன் தலைமையில் ஓர் மாபெரும் சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியாக ஒலிமுழக்கத்தோடு சென்று இரவு 7-30 மணிக்கு இரயிலடி கடை வீதியில் முடிவடைந்தது.

பின்னர் தோழர் கே. எஸ். சௌந்தரராசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் என். கிட்டப்பா இந்தி எதிர்ப்புத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசினார்; பெருத்த கையொலிகளுக்கிடையே தீர்மானம் நிறைவேறியது.

ஊர்வலத்தில் நகர தி. மு. க.- தி. மு. க. மாணவர் கிளை, ஆசிரியர் வேலாயுதம் மன்றம், கே. வி. கே. சாமி படிப்பகம், இளங்கோ மன்றம், தில்லையாடி வள்ளியம்மைப் படிப்பகம், உதயசூரியன் படிப்பகம், நடராசன் வாசகசாலை, திரு. வி. க. படிப்பகம், மஜீத் மன்றம் ஆகிய நிறுவனங்களும் ஆறுபாதி விளநகர், செண்பகச்சேரி, மல்லிகைச்சேரி, மாப்படுகை, கட்டளைச்சேரி, திருமங்கலம், மணக்குடி, திருக்கடவூர் ஆகிய ஊர் தி. மு. கழகத் தோழர்களும் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தில் கலந்துகொண்ட தோழர்களுக்கு தோழர் மா. கி. இராமசாமி குளிர்பானம் வழங்கினார்.

ஊர்வலத்தின்போது நகரின் முக்கிய இடங்களில் செயலாளர் தோழர் என். கிட்டப்பா கழகக் கொடிகளை ஏற்றிவைத்தார்.

### மதுரை:

இந்தி எதிர்ப்பு நாள் சைக்கிள் ஊர்வலமும் பொதுக்கூட்டமும், மதுரை நகரச் செயலாளர் தோழர் பி. கே. சேதுராமன் தலைமையில் நடந்தன. ஊர்வலத்தில் 600-க்கு மேற்பட்ட சைக்கிள்களும், வண்டிகளும் கலந்துகொண்டன; ஊர்வலம் மிகச் சிறப்பும் வலிவும் பொலிவும் நிறைந்து காட்சியளித்தது.

மதுரையில் பல்வேறு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் இருந்தும் மக்கள் கூட்டம் திலகர் திடல் நிரம்பி இருந்தது; பொதுக்கூட்டம் இரவு 7 மணியளவில் துவங்கியது.

தலைவர் முன்னுரைக்குப்பின் மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து அவர்கள் வடநாட்டு ஏகாதிபத்தியம் இந்தியைப் பல துறைகளில் நடவஞ்சகமாகப் புகுத்தி, என்றென்றும் தென்னாட்டு மக்களை நிரந்தர அடிமைகளாக்க நினைக்கும் போக்கினை வன்மையாகக் கண்டித்துப் பேசிய பின் பொன்மலை செயலாளர் சிறிதுநேரம் பேசினார்.

பின், தோழர் கி. மனோகரன் அவர்கள் தென்னாட்டு மக்களை வடநாடு எந்த அளவுக்கு அடிமைகளாக்கத் திட்டம் தீட்டுகிறது என்பதைத் தக்க ஆதாரங்களைக் காட்டிப் பேசினார்.

அடுத்து, கூட்டத் தலைவர் அவர்களால் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கான மக்களின் ஆரவாரப் பேரொலிகளுடன் நிறைவேற்றப்பட்டன.

தோழர் மனோகரன் அவர்களுக்குப் பல படிப்பகங்களின் சார்பில் கைத்தறித் துண்டுகள், மாலைகள் அணிவிக்கப்பட்டன.

### பொன்மலைப்பட்டி:

பொன்மலைப்பட்டி தி. மு. கழகம்; மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம் ஆதரவில் காலை 8 மணிக்கு சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு பொன்மலை, பொன்மலைப்பட்டி, மேலக்கற்கண்டார் கோட்டை, அரியமங்கலம், அம்பிகாபுரம் ஆகிய ஊர்களில் சுற்றி வந்து பிற்பகல் 1 மணிக்கு முடிந்தது.

பிற்பகல் பொன்மலைப்பட்டி தி. மு. கழகப் பணிமனையில் தோழர் தட்சிணாமூர்த்தி தலைமையில் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் பி. கோவிந்தசாமி, எஸ். நரசிம்மன், என். நாகராசன், கே. மாணிக்கம் ஆகியவர்கள் இந்திய ஆட்சியாளர்கள் இந்தியைப் புகுத்தும் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்துப் பேசியபின்னர் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

### ஈரோடு:

ஈரோடு நகர சித்திக் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; இந்தி எதிர்ப்புத் தீர்மானம் நிறைவேறியபின், தோழர் ஈ. என். காளிமுத்து தலைமையில் தோழர்கள் எஸ். எம். எஸ். இப்ராகிம், இரா. பாசுராமன், ஈ. ஏ. மதார்சா, கே. கோபால் ஆகியோர் பேசினர்.

# சென்னை-இராயபுரம் நெடுஞ்செழியன் மன்றப் பொதுக்கூட்டம்

## பொதுச்செயலாளர் கலந்துகொண்டார்

சென்னை—இராயபுரம் நெடுஞ்செழியன் பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் 13—9—57 மாலை 6-30 மணிக்கு, நாகாத்தாள் தெருவில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர் இராதாமாணிக்கம் இன்னிசை வழங்கினார்.

கூட்டத்திற்குத் தோழர் அன்புரோசு தலைமை தாங்கினார்.

தலைவர் உரைக்குப் பின் தி.மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கழக இலட்சியம் குறித்தும், தற்கால அரசியல் நிலை குறித்தும் அரியதோர் கருத்துரை வழங்கினார்.

பின்னர், சென்னை நகராண்மைக் கழக உறுப்பினர் தோழர் வி. முனிசாமி அவர்கள் பேசிய பின், தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், என். சீவரத்தினம் ஆகியோர் பேசினர்.

பொதுச்செயலாளர் அவர்களால் ஒரு குழந்தைக்கு 'நெடுமாறன்' எனப் பெயரிடப்பட்டது.

பொதுச்செயலாளருக்குப் பல சங்கங்கள் சார்பிலும், தோழர் அந்தோணி அவர்களாலும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

சேலம் தேர்தல் வழக்கு நிதிக்காக பொதுச்செயலாளரிடம் ரூ. 30 அளிக்கப்பட்டது.

வட சென்னை தேர்தல் வழக்கு நிதிக்காக திராவிட நற்பணி மன்றத்தின் சார்பில் தோழர் சீவரத்தினம் அவர்களிடம் ரூ. 50 அளிக்கப்பட்டது.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

# ஆதிக்கவெறியர் உள்ளம் பற்றி ஈ. வெ. கி. சம்பத்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று சட்டத்திலே எழுதிக்கொண்டார்கள்.

"அதற்கு அடுத்தாற்போல், இப்பொழுது கிளம்பியிருப்பதாக அவர்களுடைய எண்ணம்—'இந்தியை எப்பொழுது கொண்டுவருவது; 1965-ம் ஆண்டிலா? 1975-ம் ஆண்டிலா, 1980-ம் ஆண்டிலா, 1990-ம் ஆண்டிலா?—இதைப்பற்றித்தான் இந்திய மக்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்'—என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

"ஆகவே, இரண்டே விவாதம்—ஒன்று முடிந்துவிட்ட விவாதம்; கொஞ்சம் இப்பொழுது உயிர் பிடித்துக்கொண்டிருக்கின்ற விவாதம், 1965? 1975? 1980? 1960?—என்று! இதைத் தவிர இந்தியாவிலே வேறு எந்தவிதமான கருத்துமே இல்லை என்று அவர்கள் சாதிக்க முயன்றுகொண்டிருக்கிறார்கள்.

"இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று பார்க்கும் பொழுதுதான், தமிழ்நாட்டு மண்ணிலேயிருந்து வரிசை வரிசையாக டில்லிக்குத் திரும்பிவந்த பெரியவர்களைப்பற்றி நாம் எண்ணும்போது, நாமாகத் தலை குனிந்துகொள்கிறோம்.

"இங்கிருந்து போன எவரும் தமிழர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்று எடுத்துச் சொல்லுவதற்கு மிரண்டு வந்திருக்கிறார்கள்; தமிழர்கள் எண்ணத்தை அங்கு சொன்னால் 'உதை' கிடைக்குமோ என்று பயந்து இங்கே திரும்பி உருண்டு வந்திருக்கிறார்கள்.

"அங்குபோய் மிரண்டவர்கள், இங்கு வந்து தைரியம் பெற்று, 'அங்கு நேரு என்ன சொல்லுகிறார் தெரியுமா? பந்த் என்ன சொல்லுகிறார் தெரியுமா?—இதெல்லாம் நடக்காது; ஏற்றுக்கொண்டுதான் தீர வேண்டும் எனக் கூறுகிறார்கள்'—என்று!

"இந்த மிரட்டலைத்தான் இங்கு கொண்டுவந்தார்களே தவிர, நம்முடைய உள்ளக்குமுறலை அங்கு கொண்டுபோவதற்கு இவர்களினாலே முடியவில்லை.

"இன்றைக்கும் அங்கிருக்கும் காங்கிரசு நண்பர்கள் செய்துகொண்டிருக்கின்ற காரியம், ஆதிக்கவெறியர்களுடைய காரியத்தைவிட—தமிழ் நாட்டைத் தலைகுனிய வைக்கக்கூடிய காரியமாகும்; இன்றைக்கு இவர்கள் அங்கே ஒரு புதிய தைரியம் பெற்று பது விண்ணப்பம் போடுகிறார்கள்; 'இந்தியை 1965-ல் கொண்டுவருவதாக எண்ணுகின்ற பெருமானே! தயவு செய்து, 1990-ல் கொண்டுவாருங்கள்; பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்'—என்று கையெழுத்துப் போடுகிறார்கள்.

"இவர்கள், மிகுந்த தைரியம் வந்து, இந்த 10 வருட காலத்திலே செய்த அபார காரியம், விண்ணப்பம் போடுகின்ற காரியம்! இதனாலே தமிழர்களுக்கு வந்திருக்கின்ற இழுக்கை, நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"ஆச்சாரியாரவர்கள் அன்றையத்தினம் மிக நன்றாகக் கேட்டார்கள்—'காங்கிரஸ்காரர்களே, நெஞ்சிலே கை வைத்துச்சொல்லுங்கள்; இந்தி 1990-லே வர வேண்டுமென்று நீங்கள் ஆசைப்படுகிறீர்களா?'—என்று! அவர், காங்கிரஸ்காரர்களுடைய உள்ளும் புறமும் அறிந்தவர்; ஆகவே, உரிமையோடு கேட்டார்.

"உள்ளபடியே காங்கிரஸ் நண்பர்கள், நம்மிடையே உரையாடும்போது சொல்லுகிறார்கள்-'இந்தி தேவையில்லை' என்று! ஆனால், விண்ணப்பத்திலே எழுதுகிறார்கள்—'1990-ல் கொண்டுவாருங்கள்; 1965-லே வேண்டாம்'—என்று! எழுதுவதோடு நின்று விடுகிறார்களா? பிறகு வந்து, 'எப்படி நமமுடைய வேலை?' என்று கேட்டு நம்மிடத்திலே சபாஷ் பட்டம் பெறுவதற்கு நிற்கிறார்கள்; 'இதில் என்னய்யா, அபாரமான வேலையிருக்கிறது?' என்று கேட்டால், 'அதுதான் உங்களுக்கு அனுபவமில்லை; இது உங்களுக்குத் தெரியாது; எங்களுக்கல்லவா தெரியும்? நீங்கள் வாட்டுக் கூச்சல் போடுவதனாலே இந்தி நின்றுவிடுமா?' என்கிறார்கள்.

"'எங்கே, உங்கள் அனுபவச் சாற்றைக் கொஞ்சம் பிழியுங்கள்' என்றால், விளக்குகிறார்கள்-'இப்பொழுது என்னய்யா வருஷம்?'—'1957'—'1990-க்கு இன்னும் 33 வருடங்கள் இருக்கின்றன; இந்த 33 வருடங்கள் வரையிலே இந்திக்கு நாம் வாய்தா வாங்கிவிட்டால், 33 வருடங்கள் நாம் இருக்கப்போகிறோமா? உலகிலே தப்பித்தவறி இருந்தாலும் அரசியலிலே நிடிக்கப்போகிறோமா? ஆகவே, 33 வருடங்களுக்கு நம்முடைய அபார இராசதந்திரத்தின் விளைவாக ஒரு வாய்தா வாங்கிவிட்டால், அதற்குப் பிறகு வருகிறவன்—அவனுக்குச் சாமர்த்தியமிருந்தால் அவனும் ஒரு 30 வருடம் வாங்கிப் பிழைத்துப் போகட்டும்!'—இப்படி அவர்கள் எண்ணுகிறார்களே!

"இவர்களுடைய கோழைத்தனத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிற இந்த நாட்டு மக்களைப் பற்றி ஏன் அவன் அஞ்சப்போகிறான்? அவனுக்குத் தெரியாதா, 'இவர்கள் உள்ளம் இந்தியை ஏற்றுக்கொள்ளவில்லை' என்பதை அவன் அறிய மாட்டானா? ஆனாலும் அவன், பார்த்துப் புன்முறுவல் பூக்கிறான்—'கோழைகள்! நம்முடைய தர்பாருக்கு வந்தவுடன் எப்படி நடுநடுங்கி, தொடை நடுங்கி வாய்தா கேட்கிறார்கள்'—என்றுதான் எண்ணுகிறான்; 'நாம் எதைச் சுமத்தினாலும் இந்த மக்கள் அதை ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லாத வகையற்றவர்கள்'—என்ற கருத்திலே அவன் எதையும் செய்வதற்குத் துணிந்து நிற்கிறான்.

"அவனுக்கு, இங்கே நடப்பது எல்லாம் தெரியும்; இவர்கள் உள்ளத்திலே எழுகின்ற எண்ணங்கள் அனைத்தையும் அவன் உணருவான்; உணர்ந்ததற்குப் பிறகு, இவர்கள் சொல்லுகிற இராஜதந்திரத்திற்கு அவன் இணங்குவானா என்றால், மாட்டான்!

"இந்தச் சமுதாயத்தினுடைய சுயமரியாதை உணர்ச்சியைப் பற்றியும், இங்கு வாழுகின்ற சமுதாயத்தினுடைய உரிமை வேட்கையைப் பற்றியும் அவன் யாரைக் கொண்டு மதிப்பிடுகிறான்? நம்முடைய மாபெரும் பிரதிநிதிகளை அவன் அன்றாடம் பார்க்கிறான்; அவர்களுடைய யோக்கியதை, அவர்களுடைய தைரியம், அவர்களுடைய அரசியல் நாணயம், நேர்மை இவைகளை வைத்துக்கொண்டு, 'சரி; இவர்களைப் பிரதிநிதிகளாக அனுப்பியிருக்கின்ற சமுதாயம், எவ்வளவு மாக்கட்டைச் சமுதாயமாயிருக்கும்?'—என்று அவன் கணக்குப் போட்டுக்கொள்கிறான்.

"இந்த நிலைமை, 'நமக்கு, இந்திய அரசியலிலே துளியும் மதிப்புக் கிடையாது; வடக்கிலிருக்கின்றவன் நம்மைக் கால் தூசுக்குச் சமானமாக மதிக்கிறான்; புழுப்போல் கருதுகிறான்' என்று உணர்த்துமானால், அதற்குக் காரணம், நம்முடைய பிரதிநிதிகளுடைய இலட்சணம் அப்படியிருக்கிறது; ஆகவே, அவன் அப்படி நம்மைக் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறான்.

"இனி நாம், நம்முடைய பிரதிநிதிகளின் மூலமாக அங்கே நம்முடைய குரலை எடுத்துச் சொல்லுவதோ, நம்முடைய உள்ளங்களை அங்கே வெளிப்படுத்துவது என்பதோ, மிகச் சாதாரணமான காரியம் என்று நான் கருதவில்லை.

(பேச்சு முடியவில்லை)

## மாயூரம் தொகுதி தேர்தல் வழக்கு

உயர்நீதிமன்ற விசாரணை முடிந்தது

சென்னை, அக். 16—

மாயூரம் தொகுதி கழக அபேட்சகரான குடவாசல் தோழர் சி. கிருஷ்ணமூர்த்தியின் அபேட்சை மனுவை நிராகரித்தது தவறு என்றும், எனவே, நடைபெற்ற மாயூரம் தொகுதி தேர்தல் செல்லத்தக்கதல்லவென்றும், கீழத் தஞ்சை மாவட்ட நீதிபதி (நாகைப் பட்டினம்) 5—8—57-ல் தீர்ப்பளித்ததை ஆட்சேபித்து, வெற்றி பெற்ற காங்கிரஸ் அபேட்சகரான திரு. ஜி. நாராயணசாமி நாயுடு சென்னை உயர் நீதிமன்றத்தில் அப்பீல் தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு விசாரணை 14-10-57ல், துவங்கி தொடர்ந்து நடந்து, இன்றோடு இருதரப்பு வாதங்களும் முடிவடைந்துவிட்டன; தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

கழக அபேட்சகருக்கு திரு. வி. ஜி. ராவ் அவர்களும், காங்கிரஸ் அபேட்சகருக்கு அட்வகேட் ஜெனராலும் ஆஜரானார்கள்.

(ந-கி.)

## தென் மாநிலங்களில் மின்சார உற்பத்தி

சென்னையின்பற்றுக்குறைநிலையை மாற்ற வழி என்ன?

புதுடில்லி, அக். 17—

தென் மாநிலங்களின் மின்சாரத் தேவை என்ன, இப்போது உற்பத்தியாகும் அளவு என்ன என்பதை எல்லாம் மத்திய சர்க்கார் கணக்கெடுத்துப் பார்த்ததாம்!

அதன்படி, நெய்வேலியில் அமைக்கப்படவிருக்கும் தெர்மல் நிலையத்தில் உற்பத்தியாகும் மின்சாரம்மட்டும் சென்னைக்குப் போதுமானதாயிருக்காது என்றும், அதன் பின்னரும் வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரம் தேவைப்படும் என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

முதல் திட்டத் துவக்கத்தில், சென்னையில் மின்சார உற்பத்தி 1,18,015 கிலோவாட் என்றும், ஆனால் தேவை 1,41,200 கிலோவாட் என்றும், இதனால் பற்றுக்குறை 22,185 கிலோவாட் இருந்தது என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

முதல் திட்ட முடிவில், உற்பத்தி 1,45,000 கிலோவாட் என்றும், ஆனால் தேவை 2,26,000 கிலோவாட் என்றும், இதனால் பற்றுக்குறை 81,000 கிலோவாட் என்றும் கூறப்படுகிறது.

எனவே, பற்றுக்குறையிலிருக்கும் சென்னைக்கு அண்டை மாநிலங்கள் உதவமுடியும் என்றும், இதற்கான கூட்டு உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப்படலாம் என்றும் கூறப்படுகிறதாம்.

## மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைப்பு

தனி அதிகாரிகளிடம் நிர்வாகம் ஒப்படைக்கப்படும்

புதுடில்லி, அக். 18—

இப்போதைய மாவட்ட ஆட்சி மன்றங்களின் காலம் 1—11—57ம் நாளுடன் முடிவு பெறுகிறது.

மாவட்ட மன்றங்கள் தொடர்ந்து நீடிக்கவேண்டுமா கூடாதா என்பது பற்றியும், தலதாபனங்களின் எதிர்காலம் பற்றியும் சர்க்கார் முடிவு செய்யும் வரையில் மாவட்டக் கழகத் தேர்தல்களை 31—10—58 வரையில் ஒத்திவைக்க முடிவு செய்துள்ளனர். மாவட்டக் கழகங்களின் அதிகாரம் தனி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும். இந்த நோக்கங்களுக்காக மசோதா ஒன்று கொண்டுவரப்படுகிறது.

******************

தலைமை நிலையச் செய்தி:

## அறிவிப்பு

அறிஞர் அண்ணா அவர்களுடைய படத்தைப்போட்டுத் 'தீபாவளி வாழ்த்து' என்று தலைப்பிட்டு தீபாவளி வாழ்த்து மடல் ஒன்றை, ஊர்—பெயர் போடாத யாரோ ஒருவர் அச்சடித்து விற்பனை செய்துவருவதாக நமக்குச் செய்தி எட்டியுள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களுக்கும் கழகத்திற்கும் களங்கம் ஏற்படுத்தும் முறையில் செய்யப்படும் இந்த முறையற்ற செயலைச் செய்யவேண்டாமென்று உரியவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவதோடு, இதற்கான ஆதரவு தரவேண்டாமென்று கழகத் தோழர்களும், பொதுமக்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

******************

## கழகக் கூட்டங்கள்

★

**சேலம்:**

'வி' மார்க்கெட்டில்

20—10—57 மாலை 6½மணிக்கு

தலைவர்: இ. ஏ. ஆர். ரங்கனதன்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.

ஈ. ஆர். கிருஷ்ணன்

★

**சென்னை 14-வதுவட்டம்:**

அண்ணா பிள்ளைத் தெரு

(கொத்தவால்சாவடி அருகில்)

20—10—57 மாலை 6 மணிக்கு

தலைவர்: ரகுநாதன்

பேசுவோர்:

டி. கே. சீனிவாசன்

கோ. செங்குட்டுவன்

இசை: சேலம்-சீனிவாசன்

★

**மேட்டூர்:**

பொதுஜன சேவா சங்க மைதானத்தில்

21—10—57 மாலை 6½மணிக்கு

தலைவர்: முத்துசாமி

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

எஸ்.எஸ். எம். சுப்பிரமணியம்

க. கு. சின்னசாமி, அ. பாலு

அன்று மாலை 4-30 மணிக்கு, இந்தி எதிர்ப்பு சைக்கிள் ஊர்வலம், சாம் பள்ளியிலிருந்து தோழர் கே. எஸ். கன்னியபன் தலைமையில் புறப்படும்.

இராமலிங்கர் பிறந்த நாள் விழா

20—10—57 மாலை 6 மணிக்கு சென்னை—வேளாளத் தேனாம்பேட்டை போலீஸ் நிலையம் எதிரில், சமரச சன்மார்க்க சங்கத்தின் சார்பில், இராமலிங்க அடிகளின் 135-வது பிறந்தநாள் விழா நடைபெறும். பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, பேராசிரியர் மயிலை-சிவ. முத்து, புண்ணியகோட்டி, வா. பா. தாமரைக்கண்ணி அம்மையார் ஆகியோர் பேசுவர்.

## தீப்பற்றாத சட்டை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது; இந்த விசித்திர ஆடையை மாஸ்கோ பஞ்சாலைக் கழகம் உற்பத்தி செய்துள்ளது.

உருக்குத் தொழிலாளர்கள், பட்டறைத் தொழிலாளர்கள், மின்சார ஊழியர்கள் ஆகிய பல்வகைத் தொழிலாளர்களுக்காகவும் இத்தகைய ஆடைகள் உற்பத்தி செய்யப்பட்டு பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

மெல்லிய செப்புத் 'துணி' பொருத்தப்பட்ட சட்டையை மின்சார ஊழியர்கள் அணிந்துகொண்டால், மின்சாரப் பொறிகளால் ஆபத்து ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

## நம்பிக்கை இழந்து நாடு திரும்புகிறார் நிதி அமைச்சர்

லண்டன், அக். 18—

"நான் பலரைச் சந்தித்தேன்; நிலைமையை விளக்கினேன்; என்ன நடக்கும் என்று எப்படி மதிப்பிடுவது? மனதில் நம்பிக்கையுடன் நான் திரும்புவதாகக் கூறமுடியாது" என்று நிருபர்களிடம், இந்திய நிதி அமைச்சர் டி. டி. கே. தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், 'அடுத்த 18 மாதங்களில் மட்டும் 17 கோடி பவுன் அந்நியச் செலவாணி வசதி இந்தியாவுக்கு வேண்டும்; இது கிடைத்தாலன்றி புதிய திட்டங்கள் மேற்கொள்ளப் படமாட்டாது' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## வாக்குச் சீட்டில் குறிபோடும் முறை

முதல்தர பஞ்சாயத்துத் தேர்தலில் கையாளப்படும்

சென்னை, அக். 18—

வாக்குச் சீட்டில் குறிபோடும் முறையை, எல்லா முதல்தர பஞ்சாயத்துக்களின் தேர்தல்களிலும் கையாள வேண்டுமென்று அரசாங்கம் அறிவித்துள்ளது. சில முதல் தர, இரண்டாம்தர பஞ்சாயத்துக்களில் கையாளுமாறு ஏற்கெனவே உத்தரவிடப்பட்டிருந்தது.

## வெள்ளனூர், சிவகாசி

தொழிலாளர்களுக்கு வீடுகள்

சென்னை, அக், 18—

திருச்சிமாவட்டத்தைச் சேர்ந்த வெள்ளனூரில் தொழிலாளர்களுக்காக ரூ. 12·25 இலட்சம் செலவில் 406 வீடுகள் கட்ட அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

சிவகாசியில் 260 வீடுகள் கட்ட ரூ. 80,000 செலவிட சென்னை அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

## நிலச் சீர்திருத்தத்தில் ஒரே முறை ஏற்படும்?

ஆராயக் குழு நியமனம்

புதுடில்லி, அக். 18—

இந்திய மாநிலங்களில் அமுலாக்கப்பட்டுள்ள நிலச்சீர்திருத்த முறைகளைப்பற்றி ஆராய்ந்து, நாடெங்கும் ஒரேமாதிரியான முறையை ஏற்படுத்த 3-உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றை திட்டக்குழு நியமித்துள்ளது.

பேராசிரியர்கள டாண்ட்வாலா, தண்டேகர், கோஷ் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்கள்.

தென்னாட்டைச் சேர்ந்தவர் ஒருவர்கூட குழுவில் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தாழ்த்தப்பட்டவர் விடுதிகள்

தனியாரிடமிருந்து அரசாங்கம் ஏற்றுக்கொண்டது

சென்னை, அக். 18—

தனிப்பட்ட அமைப்புகள் நடத்திவரும் 200 தாழ்த்தப்பட்டவர் விடுதிகளில் 30-விடுதிகளை சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

அரசாங்க உதவியைப் பெற்று தனியார் நடத்திவரும் தாழ்த்தப்பட்டவர் விடுதிகளை அரசாங்கமே ஏற்று நடத்துவது என்று செய்யப்பட்ட முடிவை யொட்டி இவ்வாறு செய்யப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.